DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.304/2019**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | கோபாலகிருஷ்ணன் |
| Father Name | : | முத்து கண்ணன் |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2023

( 2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் காவல் துறையில் பணியில் இருந்து 30.04.2023 ம் தேதி ஓய்வு பெற்றுவிட்டேன். வழக்கு சம்பவ சமயம் தலைமை காவலராக பணியில் இருந்தேன். அசா–1 யை தெரியும். வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர்களை தெரியும். கடந்த 22.03.2016 ம் தேதி செக்கானூரணி பகுதியில் தேர்தல் பணியில் இருந்தோம். எங்கள் அணியில் சார்பு ஆய்வாளர் பெரியசாமி, நான், பெண் காவலர் 407 மகேஸ்வரி ஆகியோர் இருந்தோம். செக்கானூரணியிலிருந்து சோழவந்தான் ரோட்டில் தேங்கல்பட்டி அருகில் பெட்ரோல் பல்க் அருகில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தோம். அப்போது சோழவந்தானிலிருந்து திருமங்கலம் மார்க்கமாக வந்த TN 57 AL 3586 என்ற வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தோம். அந்த வாகனத்தில் வெடிபொருட்கள், டெட்டனேட்டர், ஜெலடின்

இருந்தது. அதிகாரிகள் பார்வையிட்டு விசாரணை செய்து மேல்விசாரணைக்காக செக்கானூரணி காவல் நிலையத்தில் வாகனத்தையும் அதில் வந்த இரு நபர்களையும் ஒப்படைத்தார்கள். நான் உதவியாக இருந்தேன். 1200 ஜெலடின், 700 டெட்டனேட்டர்கள் இருந்தன. அசா–1 புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பில் கு,.வி –

போலிசார் என்னை விசாரிக்கும் போது 22.03.2016 ம் தேதி செக்கானூரணி பகுதியில் தேர்தல் பணியில் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் எந்த நாளில் சம்பவம் நடந்தது என்று போலிஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் சோழவந்தானிலிருந்து திருமங்கம் மார்க்கமாக சென்ற வண்டி என்று போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். செக்கானூரணி காவல் ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் ஆகியோர் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். நான் காவல் நிலையத்திற்கு வெளியே இருந்தேன். நான் காவல் நிலையத்திற்கு வெளியில் இருந்ததால் புகார் யார் கொடுத்தார், யார் எழுதினார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாகன சோதனை செய்த பின்னர், அசா–1 யிடம் வண்டியிலிருந்த டிரைவரும் ஓனரும் அதிகாரிகளிடம் ஆவணங்களை காட்டினார்கள். அப்போது வண்டியில் இரண்டு நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். வண்டியிலிருந்த 2 வது நபர் வெடிபொருட்களை கையாளும் நபர் என்றால் எனக்கு தெரியாது. வெடிபொருட்கள் அட்டை பெட்டியில் வைத்து தயாரிப்பாளர் யார், பேட்ச் நம்பர், போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த அட்டை பெட்டிகளுடன் தான் அசா–1 காவல் நிலையத்தில் ஒப்படைத்தார் என்றால் சரிதான். கைப்பற்றியது, சோதனை செய்தது ஆகியவற்றை எல்லாம் அசா–1 தான் செய்தார் என்றால் சரிதான். வாகன சோதனையில் ஈடுபடும் போது எங்களுடன் வீடியோ cum போட்டோகிராபர்

ஒருவர் இருந்தார் என்றால் சரிதான். அவர் எங்களுடன் இருந்த விவரம் சம்பவயிடத்திற்கு வந்த செக்கானூரணி ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளருக்கு தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன மாதிரி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால்சரியல்ல. நான் வேலை பார்த்த காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சோதனையிடும் போது முதலில் ஒரு இ வாகனத்தை சோதனை செய்து அனுப்பிவிட்டோம் என்றும் இரண்டாவதாக ஒரு இ வாகனத்தை சோதனை செய்தோம் என்றால் சரியல்ல. இரண்டு இ வாகனங்களில் உள்ள ஆவணங்களை அசா–1 கைப்பற்றினார் என்றால் சரியல்ல. சட்டவிதிகளுக்கு உட்பட்டு தான் அனைத்து சம்பவமும் நடைபெற்றது என்றும் எதிரிகள் சட்டவிதிகளை மீறி எந்த செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும் சரியல்ல. 2ம் எதிரி சம்பவயிடத்திலே இல்லை என்றாலும் சரியல்ல. சம்பவ நேரத்தில் TN 57 AL 3586, TN 57 AA 8235 இரண்டு வாகனத்திலும் தனித்தனியாக மருந்து கையாளுனருடன் வெடிபொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டன என்றும் நாங்கள் வழக்கிற்காக ஜெலடின், டெட்டனேட்டர்கள் இரண்டையும் ஒரே வாகனத்தில் வைத்திருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.